மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை
அசல் வழக்கு எண். 55/2019

**2025–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24–ம் நாள் திங்கள் கிழமை** வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய DW–1 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) **செல்வி.S.இவாஞ்சலின், இளநிலை உதவியாளர்** என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :செல்வராஜ் | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | :செங்கமலை | வட்டம் | :வேப்பந்தட்டை |
| கிராமம் | :தழுதாழை | வயது | : 52/2025 |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

(i) பழைய ச.எண்.171/2 ல் ஏக்கர் 12.40 செண்ட் நிலத்தில் நானும், எனது அம்மா அங்கம்மாள், எனது மனைவி கீதா ஆகியோர் கிரையம் பெற்றுள்ளோம் என்றால் சரிதான். நான் கிரையம் பெற்றுள்ள சொத்தின் ச.எண்.241/27 என்றால் சரிதான். ச.எண்.241/30 எனது அம்மா கிரையம் பெற்ற சொத்து என்றால் சரிதான். தாவா சொத்தை வாதி அவருக்குரிய பட்டா அனுபவ படி தான் வீடு கட்டி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. மீதியுள்ள காலியிடமும் அவரது அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. ச.எண்.241/27 எனது அம்மா கிரையம் பெற்ற சொத்திற்கு வடபுறம் உள்ளது என்றால் சரிதான். எனது சொத்திற்கு தென்புறம் எனது அம்மா கிரையம் பெற்ற சொத்து உள்ளது என்றால் சரிதான். எனது சொத்திற்கு கிழக்குபுறம் கணேசன் சொத்து உள்ளது என்றால் கணேசன் சொத்து பாதியும், எனது மனைவி கீதா சொத்து பாதியும் உள்ளது. எனது சொத்திற்கு கிழக்கு புறமாக கணேசன் நிலமும், எனது தாயாரின் சொத்துக்கு கிழக்குபுறம் பொதுசந்தும் அதன்பின்னிட்டு கணேசன் சொததும் உள்ளது என்றாலும் எனது மனைவி கீதாவிற்கு அங்கு எந்த சொத்தும் இல்லை என்றாலும் சரியல்ல. தாவா சொத்தை வாதி தான் அனுபவம் செய்து வருகிறார் என்றாலும், அதனால் தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றாலும் சரியல்ல. பொது சொத்தை எனது மனைவி பெயருக்கு கிரையம் பெறுவதற்கு உரிமையில்லை என்றாலும் அவ்வாறு பெற்றிருந்தாலும் அது செல்லதக்கதல்ல என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை:** இல்லை.